**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.495/2021**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இசக்கி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of May 21st, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

எனது சொந்த ஊர் ஏ.பி.நாடானூர். எனது ஊருக்கும், குத்தபாஞ்சான் ஊருக்குமிடையே 15 கி.மீ தொலைவு இருக்கும் என்றால் 10 கி.மீ தொலைவு தான் இருக்கும். இந்த வழக்கின் சாட்சி சேர்மன் எனது அக்கா கணவர். எனது அக்காவிற்கு 2009ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. எனது அக்காள் கணவரின் ஊர் மேலகுத்தபாஞ்சான். நான் மேலகுத்தபாஞ்சானில் நிரந்தரமாக குடியிருக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ காலகட்டத்தில் நான் எனது அக்கா வீட்டில் தான் தங்கி வந்தேன். மேலகுத்தபாஞ்சானுக்கு 2 கி.மீ தொலைவில் கீழகுத்தபாஞ்சான் ஊர் உள்ளது என்றால் சரிதான். மேலகுத்தபாஞ்சான் ஊரில் நாடார் சமுதாயத்தை சேர்ந்த சுமார் 150 வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். நானும், எனது அத்தானும் நாடார் சமூகத்தை சேர்ந்தவர்கள். 2வது எதிரி மறவர் சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். 2ம் எதிரியின் சமுதாயத்தை சேர்ந்தவர்களின் வீடு அங்கு சுமார் 50 வீடுகள் இருக்கும்

என்றால் சரிதான். கீழகுத்தபாஞ்சான் ஊரில் தேவேந்தர் குல வேளாளர் சமுதாயத்தை சேர்ந்த மக்கள் வசிக்கின்றார்கள் என்றால் சரிதான். அங்கு சுமார் 300 வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். மேலகுத்தபாஞ்சான் மற்றும் கீழகுத்தபாஞ்சானில் 4 ரோடுகள் சந்திக்கும் இடத்தில் பிள்ளையார் கோவில் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தினத்தன்று எனக்கு கீழகுத்தபாஞ்சான் ஊரில் வைத்து காயம் ஏற்பட்டது என்றால் மேலகுத்தபாஞ்சான் ஊரில் வைத்து தான் காயம் ஏற்பட்டது. நான் போலீசார் விசாரிக்கும் போது, கீழகுத்தபாஞ்சான் ஊரில் வைத்து காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு குத்தபாஞ்சான் ஊரில் வைத்து காயம் ஏற்பட்டதாக போலீசாரிடம் கூறினேன். நான் போலீசார் விசாரிக்கும் போது, எனக்கு கீழகுத்தபாஞ்சான் ஊரில் வைத்து காயம் ஏற்பட்டதாகத் தான் கூறினேன் என்றும், தற்போது வழக்கிற்காக குத்தபாஞ்சான் ஊரில் வைத்து காயம் ஏற்பட்டதாக போலீசார் விசாரணையில் கூறினேன் என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரியின் வீடு மேலகுத்தபாஞ்சான் ஊருக்கு செல்லும் வழியில் மெயின் ரோட்டிற்கு அருகே பாலத்திற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரியின் வீடு பஞ்சாயத்து போர்டு தெருவில் உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரியின் சொந்த ஊர் நெட்டூர் என்றால் சரிதான். 1ம் எதிரி, 2ம் எதிரியின் தங்கையை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். 1ம் எதிரிக்கு நெட்டூரில் பல வழக்குகள் இருந்தது என்றும், அதனால் தான் அவர் ஊரை காலி செய்து விட்டு, மேலகுத்தபாஞ்சானில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். 1ம் எதிரி மேலகுத்தபாஞ்சான் ஊரில் வசித்து வந்ததினால், அடிக்கடி போலீசார் அங்கு வருவார்கள் என்றால் எனக்கு

அந்த அளவு 1ம் எதிரியைப் பற்றி விபரங்கள் தெரியாது. எனக்கு, 2ம் எதிரியை மட்டும் தான் தெரியும். 1ம் எதிரியை சம்பவத்தின் போது தான் நான் பார்த்தேன். 1ம் எதிரி ஊரில் இருப்பதினால் அடிக்கடி போலீசார் வருகிறார்கள் என்றும், எனவே, 1ம் எதிரியை ஊரை காலி செய்து விட்டு போகுமாறு சொல்ல, 2ம் எதிரியிடம் எங்கள் சமுதாயத்தை சேர்ந்த ஊர்மக்கள் வலியுறுத்தி வந்தார்கள் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. 2ம் எதிரியிடம் ஊர்மக்கள், 1ம் எதிரியை ஊரை விட்டு செல்வதற்கு 2ம் எதிரியிடம் கூறிய விபரம் எனக்கு தெரியும் என்றும், 2ம் எதிரி, 1ம் எதிரியின் பாதுகாப்பிற்காகத் தான் அவர் தங்கியிருக்கிறார் என்றும், அவரை ஊரை விட்டு அனுப்ப முடியாது என்று கூறியதினால் எங்கள் சமுதாயத்தை சேர்ந்த மக்கள் 2ம் எதிரி மீது கோபமாக இருந்தார்கள் என்றால் சரியல்ல. 1ம் எதிரி அவரது எதிரிகளால் கொலை செய்யப்பட்டார் என்றால் சரிதான். மேலகுத்தபாஞ்சான் பிள்ளையார் கோவிலுக்கு அருகே இராமசாமி, பாப்பா, மாரியப்பன் இவர்களது வீடுகள் ரோட்டிற்கு கீழ்பக்கம் உள்ளது என்றால் சரிதான். மேலகுத்தபாஞ்சான் பிள்ளையார் கோவிலுக்கு வடபுறம் மணிமுத்து, சுடலைமணி, செல்வம் இவர்களது வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அவர்களது வீடுகள் பிள்ளையார் கோவில் பக்கத்திற்கு அருகிலுள்ளது என்றால் சரிதான். நான் பிளஸ் டூ வரை படித்துள்ளேன். இந்த சம்பவத்திற்கும் 4 மாதங்களுக்கு முன்பு செல்லப்பிள்ளையார்குளம் ஊரைச் சேர்ந்த முருகலிங்கம் என்பவரது மகளை நான் கடத்தி சென்றதாக ஆழ்வார்க்குறிச்சி காவல்நிலையத்தில் என் மீது புகார் கொடுக்கப்பட்டது என்றால் அவர் எனது மாமன். அவரது மகளும், நானும் காதலித்ததினால் அவர் என் மீது

அவ்வாறு ஒரு புகார் கொடுத்தார். அவரது மகளை நான் கூட்டிச்சென்றேன் என்றால் சரிதான். அந்த பிரச்சனை நடந்து கொண்டிருக்கும் போது, எனது அத்தான் பட்டியல் சாட்சி-2 ஐ காவல்நிலையத்தில் பிடித்து வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த பிரச்சனையில் முருகலிங்கம் அவரது மகளை அழைத்து சென்று விட்டார் என்றால் சரிதான். முருகலிங்கம் எனது மாமா என்று நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு கீழகுத்தபாஞ்சான் ஊரைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் தவறான பழக்கம் இருந்தது என்றால் சரியல்ல. சம்பவத்திற்கும், 2-3 மாதங்களுக்கு முன்பு எனது அத்தான் மணி என்ற பால்காரர் மீது கடையம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் அது எனக்கு தெரியாது. மணி என்பவர் மேலகுத்தபாஞ்சான் கிராமத்தை சேர்ந்த பால்காரர் என்றால் சரிதான். மேலகுத்தபாஞ்சான் கிராமத்திற்கு 3 பால்காரர்கள் என்றால் சரிதான். பால் கம்மியாக இருக்கும் பட்சத்தில், 3 பால்காரர்களும் மாறி, மாறி அவர்களுக்குள் பால் வாங்கிக்கொள்வார்கள் என்றால் சரியல்ல. எனது அத்தான் இருசக்கரவாகனத்திற்கு பின்னால் 40 லிட்டர் பால் கேன் வைத்திருப்பார் என்றால் சரிதான். எதிரியும் தனது இருசக்கரவாகனத்திற்கு பின்னால் பெரிய பால் கேன் வைத்திருப்பார் என்றால் அது எனக்கு தெரியாது. எனது அத்தானின் இருசக்கரவாகனத்திற்கு பின்னால் பால் கேன் வைத்திருப்பதினால், 2 பேர் உட்கார்ந்து பயணிக்க முடியாது என்றால் பின்னால் உள்ள கேரியரில் தான் பால் கேன் வைத்திருப்போம். அதனால், இருசக்கரவாகனத்தில் 2 பேர் பயணிக்க முடியும். எனது அத்தான் சம்பவ சமயத்தின் போது, பிளாட்டினா பைக் வைத்திருந்தார். பிளாட்டினா வாகனம் 100 சிசி திறனுடையது என்றால் சரிதான். 100 சிசி திறனுடைய இருசக்கரவாகனத்திற்கு பின்னால் கேன் வைத்திருந்தால் இன்னொரு

நபர் அதில் பயணிக்க முடியாது என்றால் சரியல்ல. எனது அத்தான் மதியம் 2 மணிக்கு வீடுகளுக்கு சென்று பால் கறந்து, பால் சேகரித்து கொண்டிருப்பார் என்றால் 01.30-2.00 மணிக்கு அவ்வாறு பால் கறக்க சென்று விடுவார். நானும், எனது அத்தானுடன் பால் கறக்க சென்று விடுவேன். நான் சம்பவத்திற்கு முன்பு பால் பண்ணையிலும் வேலை பார்த்துள்ளேன். எதிரி அவர் சார்ந்த சமுதாய வீடுகளிலிருந்து பால் எடுப்பது தெரியும். நான் சார்ந்த சமுதாயத்தை சேர்ந்தவர்களின் வீடுகளிலிருந்து பால் சேகரிப்பது எனக்கு தெரியாது. நான் எனது அத்தான் ஊரில் இருந்ததில்லை என்றும், நான் அவருடன் பால் சேகரிக்க சென்றதில்லை என்றும், எப்போதாவது ஒரு நாள் தான் எனது அத்தான் ஊருக்கு வருவேன் என்றும், அதனால் தான் எனது அத்தான் மற்றும் எதிரி செய்யும் வேலை பற்றி எனக்கு முழுமையாக தெரியவில்லை என்றால் சரியல்ல. நானும், எனது அத்தானும் சம்பவ சமயத்தின் போது, ஒரே பைக்கில் தான் சென்றோம். பின்னால் கேரியரில் பால் கேன் இருந்தது. நான் கேரியருக்கு பின்னாடி இருந்தேன் என்றால் சரிதான். நாங்கள் சம்பவ சமயத்தின்போது, வடக்கு திசையிலிருந்து தெற்கு திசையை நோக்கி வந்து கொண்டிருந்தோம். எதிரிகள் ஹீரோ கோண்டா மோட்டார் சைக்கிளில் வந்தார்கள். நான் எனது புகாரிலும், போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திலும் எதிரிகள் வந்த வாகனத்தின் பதிவெண் மற்றும் அது எந்த கம்பெனி பைக் என்று கூறவில்லை என்றால் பதிவெண் மட்டும் கூறவில்லை. ஹீரோ கோண்டா பைக் என்று கூறியுள்ளேன். சம்பவயிடத்தில் டீக்கடை தற்போது தான் உள்ளது. ஆனால், சம்பவ சமயத்தின் போது, வீடுகள் அங்கு இருந்தது. எங்களை தடுத்து நிறுத்திய இடம் பிள்ளையார் கோவில் முன்பு ஆகும். நாங்கள் இருவரும்

இருசக்கரவாகனத்துடன் சாய்ந்து விட்டோம் என்றால் சரியல்ல. எனது அத்தான் 10 அடி தூரம் வடதிசையை நோக்கி சென்றார். எங்களுக்குள் வாய்த்தர்க்கம் எவ்வளவு நேரம் நடந்திருக்கும் என்றால் 2-3 நிமிடங்கள் நடந்திருக்கும். எங்கள் சத்தத்தை கேட்டு பக்கத்தில் குடியிருந்தவர்கள் அனைவரும் வந்து விட்டார்களா? என்றால் ஒரு சிலர் வந்தார்கள். சம்பவயிடத்திற்கு பக்கத்திலிருந்த வீட்டைச் சேர்ந்தவர்களை போலீசார் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. பிள்ளையார்கோவில் தெருவிலிருந்து பஞ்சாயத்து போர்டு தெரு கொஞ்சம் தள்ளி உள்ளது. அது எவ்வளவு தொலைவு இருக்கும் என்று என்னால் சரியாக கூற முடியாது. எனது அத்தான் பால் கறவை செய்யும் போது, எதிரி பஞ்சாயத்து போர்டு தெருவை பால் கறவை செய்து வருவார் என்றால் சரியல்ல. அவர், மாலையில் தான் பால் கறவை செய்வார். எனது துண்டிக்கப்பட்ட கை கோவிலுக்கு அருகே விழுந்து கிடந்தது. எனது கை பிள்ளையார் கோவிலுக்கு முன்பு விழுந்தது. பிள்ளையார் கோவிலுக்கு பக்கத்தில் 3 கோவில்கள் உள்ளது என்றால் கொஞ்சம் தள்ளி கோவில் உள்ளது. என்னை 2 முறை 1ம் எதிரி வெட்டினார். முதல்முறை வெட்டும் போது, இடது கை தொங்கிக்கொண்டிருந்தது. 2ம் முறை வெட்டும் போது வலது கை பெருவிரல் மற்றும் இடது கை மொத்தமாக கீழே விழுந்தது. 1ம் எதிரி இரண்டு முறை என்னை வெட்டியதாக போலீசார் விசாரணையில் நான் கூறவில்லை என்றால் சரியல்ல. வெட்டுப்பட்ட கைகளிலிருந்து நிறைய இரத்தம் வெளியேறியது என்றால் சரிதான். அவை எனது ஆடையில் படிந்தது என்றால் சரிதான். தலையிலும் படிந்தது. சம்பவத்திற்கு பிறகு நான் அதே இடத்தில் தான் இருந்தேன். அந்த இடத்தில் ஆம்புலன்ஸ் வரும்வரை நான் ஒருமணி நேரம் வரை இருந்திருப்பேன். ஆம்புலன்ஸ்

வரும்வரை எனக்கு மயக்கம் எதுவும் வரவில்லை. நான் காயத்துடன் இருந்த ஒரு மணிநேரத்தில் ஊர்க்காரர்கள் தனியார் வாகனத்தை ஏற்பாடு செய்து, பக்கத்தில் இருந்த மருத்துவமனைக்கு அழைத்து செல்ல முயற்சி செய்யவில்லை. பக்கத்தில் இருந்தவர்கள் எனது காயத்திற்கு முதலுதவி எதுவும் செய்யவில்லை என்றால், ஈரத்துணியை வைத்து கையில் கட்டினார்கள். என்னை நேராக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போகும் வழியில், வேறு எந்த மருத்துவமனைக்கும் செல்லவில்லை. திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து தெரிந்த ஒரு நபரால் இந்த காயம் ஏற்பட்டதாக மருத்துவரிடம் நான் கூறவில்லை. மருத்துவர் என்னிடம் காயம் எப்படி ஏற்பட்டது என்று கேட்கவில்லை. என்னோடு மருத்துவமனைக்கு உடையார் மற்றும் காசி என நாங்கள் அழைக்கும் 2 அண்ணன்கள் என்னுடன் மருத்துவமனைக்கு வந்தார்கள். அவர்கள் தான் என்னை மருத்துவமனையில் சேர்த்தார்கள். திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சுமார் 10 நிமிடங்கள் மட்டும் இருந்திருப்போம். அங்கு எனக்கு முதலுதவி சிகிச்சை மட்டும் செய்யப்பட்டது. திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எனது அத்தான் வரவில்லை என்றால் ஒரு காரில் ஆம்புலன்சிற்கு பின்னால் ஊர்க்காரர்கள் வந்திருந்தார்கள். அங்கு, எனது அத்தானும் வந்தாரா? என்று நான் கவனிக்கவில்லை. என்னை திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து அங்குள்ள புறக்காவல்நிலைய போலீசார் நடந்த சம்பவம் குறித்து விசாரித்தார்கள் என்றால் அவ்வாறு அவர்கள் எதுவும் விசாரிக்கவில்லை. என்னை அங்கு உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை

அளிக்கவில்லை. நான் இந்த சம்பவம் குறித்து, திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை புறக்காவல்நிலைய போலீசாரிடம் ஒரு வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், அது இந்த வழக்கிற்காக மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல. நாகர்கோவில் திரவியம் மருத்துவமனையில் எனக்கு மாலை 07.00 மணியளவில் சம்பவ தினத்தன்று அறுவை சிகிச்சை தொடங்கியது. மறுநாள் காலை 05.00 மணியளவில் எனக்கு மயக்கம் தெளிந்தது. நாகர்கோவில் திரவியம் மருத்துவமனைக்கு என்னுடன் எனது அத்தான் வரவில்லை. என்னுடன் திருநெல்வேலி மருத்துவமனைக்கு வந்த 2 அண்ணன்களும் தான் என்னுடன் திரவியம் மருத்துவமனைக்கும் வந்தார்கள். நான் மயக்க தெளியும் போது, அவசர சிகிச்சைப்பிரிவில் தான் இருந்தேன் என்றால் சரிதான். என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கும் போது, மருத்துவப்பணியில் மருத்துவர் இருந்தார் என்றால் சரிதான். மருத்துவரிடம் நான் சரியான மனநிலையில் இருப்பதாக போலீசார் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் அதை நான் பார்க்கவில்லை. நான் வாக்குமூலம் கொடுக்கும்போது, மருத்துவர் இருந்தார் என்றால் சரிதான். எனக்கு இடது மற்றும் வலது கையில் காயம் ஏற்பட்டதினால், கைரேகையோ, கையொப்பமோ செய்ய முடியவில்லை என்றால் கையொப்பம் செய்ய முயற்சி செய்தேன். ஆனால், முடியவில்லை. அதனால், கைரேகை செய்தேன். நான் வலது கை பெருவிரல்ரேகை செய்தேன். எனக்கு வலது கை பெருவிரலிலும் காயம் ஏற்பட்டதினால் நான் கைரேகை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஒரே ஒரு ரேகை தான் செய்தேன். நான் போலீசாரிடம் மருத்துவமனையில் வைத்து, எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், அது போல் எந்த ரேகையும்

செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திலுள்ள கைரேகை என்னுடையதல்ல என்றால் சரியல்ல. போலீசார் புகார் வாக்குமூலம் வாங்கியதாக கூறப்படும் சமயத்தில் நான் சுயநினைவுடன் இல்லை என்றால் சரியல்ல. கீழகுத்தபாஞ்சான் ஊரிலுள்ள எனது கள்ளத்தொடர்பு சம்பந்தமான விரோதத்தினால், அடையாளம் தெரியாத நபர்களால் அந்த ஊர் பிள்ளையார் கோவில் முன்பு வைத்து எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், எனது சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கும் முன்விரோதம் இருந்ததினால், எனக்கு ஏற்பட்ட காயத்தைப் பயன்படுத்தி 1ம் எதிரியை ஊரை விட்டு காலி செய்ய வேண்டும் என்ற நோக்கில், ஊர்க்காரர்கள் கலந்து ஆலோசித்து இந்த புகார்மனு காலதாமதமாக தயார்செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து இந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் வைத்து, 2ம் எதிரி 1ம் எதிரியை வெட்ட தூண்டியதாக நான் எனது சமுதாயத்தினரால் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. கீழகுத்தபாஞ்சான் ஊரில் வைத்து எனக்கு காயம் ஏற்பட்டது தெரிய வந்தால், 2 ஊர்களுக்கிடையே ஜாதி ரீதியாக பிரச்சனை ஏற்படும் என்பதினால், அது மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சா.பொ.1 அரிவாள் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எனது அத்தான் ஊர்க்காரர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.05.21 16:35:39 +0530